யாழ்ப்பாண பொதுநூலகம்

# பட்டம்பெற்றவர்கள் வெளியேறுவதால் யாழ். மருத்துவ பீடத்தை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 பங்குனி: 22 றம்ழான் பிறை: 7 இதழ்: 51
யாழ்ப்பாணம் புதன்கிழமை 4-04-1990

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் கவலை

(பருத்தித்துறை)

"மருத்துவபீடக் கல்வியை முடித்துக் கொண்டு பட்டம்பெற்று வெளியேறிய மருத்துவர்கள் இன்று இங்கு இல்லாமையினாலேயே யாழ். மருத்துவபீடத்தை மூட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களில் பட்டபடிப்பைமுடித்துக்கொள்ளும் மாணவர்கள் தமக்குக் கல்வி ஊட்டிய சமுதாயத்தை மறந்து வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுவது கவலைக்குரியதாகும்."

இவ்வாறு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளை

(8ம் பக்கம் பார்க்க)

## வீடமைப்புக் கடன்: படிவங் ள் இன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பதினைந்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின்கீழ், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் கடன் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் இன்று முதல் விநியோகிக்கப்படுகிறது.

(8ம் பக்கம் பார்க்க

★ நாட்டின் பாதுகாப்புக்கும் சுதந்திரத்துக்கும்

# முரணான செய்திகளுக்கு எதிராகசட்ட நடவடிக்கை!

## ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

**நாட்டின் பாதுகாப்பையும், நீதிச் சுதந்திரத்தையும் பாதிக்கும் செய்திகளைப் பிரசுரிக்கும் அனைவருக்கும் எதிராகப் பொருத்தமான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.**

ஜனாதிபதிசெயலகம் அமைச்சரவைக் கூட்டங்கள் சம்பந்தமான தகவல்கள் உண்மைக்கு பொருந்தாத வகையில் சில பிரபல பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளதை யடுத்தே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக ஜனாதிபதிச் செயலகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சில பிரபல பத்திரிகைகள் என்றுமே இடம்பெறாத மந்திராலோசனைகள் அல்லது அரச பேச்சுவார்த்தைகள் சம்பந்தமான செய்திகளைப் பல சந்தர்ப்பங்களில் வெளியிட்டுள்ளன. இத்தகைய செய்திகள் அரசாங்கத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கத்தை உடையவையாகவும் அவதூறு விளைவிக்கும் தன்மையினதாகவும் இருக்கின்றன. எனவே இத்தகைய செய்திகளை வெளியிடுவது சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடனும், அமைச்சரவையுடனும் தொடர்புடைய முக்கிய குழுக்கூட்டங்களினதும், பேச்சுவார்த்தைகள் சம்பந்தமான செய்திகளை வெளியிடும்போது அவைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சு செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தி பிரசுரிக்கும்படி வேண்டப்படுகின்றனர். (அ)

## இலங்கை வங்கி விசேட கருமபீடம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவத்தையொட்டி, நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பித்து வைக்கப்பட்ட மேற்படி கருமபீடத்தை, இன்று புதன்கிழமை வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. கே. இராஜசுந்தரம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்.

இக்கருமபீடத்தில், சிறுவர் சேமிப்புக் கணக்குகள், சேமிப்புச் சான்றிதழ்கள், நிலையான வைப்புகள், விசா கார்ட் பத்திரங்கள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

## "நிதர்சனம்" எதிர்காலத் திட்டம் நாளை கலந்துரையாடல்!

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் ஒளிபரப்பு எதிர்காலத் திட்டம் பற்றிய கலந்துரையாடலொன்று நாளை 5-ம் திகதி மாலை 5-00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக சந்தியில் அமைந்துள்ள நிதர்சனம் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கலைஞர்களும் ஆர்வமுள்ளவர்களும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நிதர்சனம் ஒளிபரப்பின் எதிர்கால நடவடிக்கைகள் திட்டங்கள் பற்றி இக் கலந்துரையாடலின் போது விரிவாக ஆராயப்படும்.

## இன்று புதிய பாராளுமன்ற கூட்டத் தொடர்

### ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கலந்துகொள்ளாது

(கொழும்பு)

இரண்டாவது பாராளுமன்ற அமர்வின் 2வது கூட்டத் தொடர், இன்று காலை 9-50 மணிக்கு, ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாசா தலைமையில், கோட்டை ஸ்ரீ ஜெயவர்த்தனபுரத்தில் அமைந்துள்ள பாராளுமன்றத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கப்படும்.

பாராளுமன்றக் கூட்டத் தொடருக்குத் தலைமைதாங்கும் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவை இன்று காலை 9-30 மணிக்கு, பாராளுமன்ற செயலாளர் நாயகமும், சபாநாயகர் அல்ஹாஜ் எச். எம். முகம்மதுவும் பாராளுமன்ற முகவாயிலில் வைத்து வரவேற்பார்கள்.

பாராளுமன்ற அமர்வுக்கு ஜனாதிபதி தலைமைதாங்கி உரைநிகழ்த்துவார். இவரது உரையையடுத்து அமர்வு பிற்

(8-ம் பக்கம் பார்க்க)

பெருந்தோட்ட

## பெயர்ப் பலகைகளில் தமிழ் வாசகங்கள் நீக்கம்

(நுவரெலியா)

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பெயர்ப் பலகைகளில் தமிழ் வாசகங்கள் நீக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலை, காரியாலயம், அத்தியட்சகர் வாசஸ்தலம், உத்தியோகத்தர்களின் வீடுகள் தொழிலாளர் வசிக்கும் குடிமனைகள் ஆகியவை

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று நிவாரணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த, காங்கேசன்துறை தெற்கு கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு இரண்டாம்

(8-ம் பக்கம் பார்க்க)

## செப்புக்கம்பி கடத்தல்

### இலங்கையர் உட் ட மூவர் கைது

(சென்னை)

இலங்கையிலிருந்து 1½ லட்சம் ரூபா பெறுமதியான செப்புக் கம்பிகளைத் தமிழகத்திற்குக் கடத்திவந்த மூவர் கைது செய்யப்பட்டதுடன். அவர்களின் படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு, தூத்துக்குடி கடற்பகுதியில் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்த சுங்க அதிகாரிகள், இலங்கையிலிருந்து வந்த இப்படகை நிறுத்தும்படி எச்சரிக்கை விடுத்தபோது.

(8ம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதியின் தியாகம்

### அகிம்சைப் போரின் எடுத்துக்காட்டு

**- அப்பன்**

(நாவற்குழி)

"ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல அகிம்சைப்போராட்டத்திலும் தமிழ் மக்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டித் தமிழ் மக்களுக்காகத் தனது இன்னுயிரை அர்ப்பணித்தவர் அன்னைபூபதி. இந்திய இராணுவத்தின் பல அடாவடித்தனங்களுக்கும் மத்தியில் மனத் துணிச்சலுடன் உண்ணாவிரதமிருந்து எம்மானம்காத்தவர் அன்னை பூபதி".

இவ்வாறு நாவற்குழி சித்தி விநாயகர் சன சமுக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற

(8-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ்காந்தியை கொலைசெய்ய முயன்ற கடற்படை வீரர் விடுதலை

(கொழும்பு)

இந்திய முன்னாள் பிரதமர் திரு ராஜீவ் காந்தியை துப்பாக்கியால் தாக்கிக் கொலை செய்ய முயன்றதாகக் கைது செய்யப்பட்ட கடற்படை வீரர் விஜிதமேன விஜித ரோகன சில்வா நேற்று விடுதலைசெய்யப்பட்டார். இவர் கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேல் கடூழியச் சிறைத் தண்டனை பெற்றிருந்தார்.

நீதி அமைச்சர் ஜனாப் ஏ.ஸி. எஸ் ஹமீத்தின் சிபார்சின் பேரில் சுமார் 800 கைதிகள் நேற்று விடுதலைசெய்யப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் இவ்வாண்டு இறுதிவரை தண்டனைக்காலமாயிருந்தது.

நேற்று விடுதலை செய்யப்

(8-ம் பக்கம் பார்க்க)

அமைச்சர்களின்

## வெளிநாட்டுப் பயணங்கள் கட்டுப்படுத்தப்படும்

(கொழும்பு)

நாட்டுக்கு நன்மை பயக்கும் வெளிநாட்டுப் பயணங்களை மாத்திரம் அமைச்சர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள்

[8ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சொனி T. V. 20'' கலர் நஷனல் டெக் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: S. M. சித்தீக், மத்திய கிழக்கு வீதி, றெக்கிளமேசன், குருநகர், யாழ்ப்பாணம். (சி 3708)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Prima Lohmann சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறூயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற்குஞ்சுகள் Golden Comet, HylineBlack, பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி 3711)

### தேவை

வேளாங்கண்ணி வைத்திய சாலையில் வேலைசெய்வதற்கு பெண்பிள்ளை தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். டாக்டர் எம். கருணாதரன், 6-ம் குறுக்குத்தெரு, புதிய சோனக தெரு, அராலி வீதி யாழ்ப்பாணம். (சி-3705)

விற்பனை நிலையம் ஒன்றிற்கு வியாபார அனுபவத்துடன் ஆங்கிலத்தில் மற்றும் கணக்குகள் பதிவேடுகள் (E. P. F. E. T. F. Banking etc) எழுதுவதற்கு அனுபவமுள்ள இலிகிதர் (Clerk) தேவை. கல்வித் தகைமைகள், முன் அனுபவ சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. எ-661, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (எ661)

யாழ். நகரின் இரண்டு மைல்களுக்குட்பட்ட வைத்தியசாலையில் வேலைசெய்வதற்கு ஓர் அனுபவமுள்ள ஆயுர்வேத பெண் வைத்தியர் தேவை. 10-ம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி. 3710 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி 3710)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


முதலாம்தர அதிபர் நேர்முகப் பரீட்சை:

# தமிழ் மாவட்டங்களிலிருந்து 40பேருக்குமட்டுமே அழைப்பு

(மருதங்கேணி)

முதலாம்தர அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு தமிழ் மாவட்டங்களிலிருந்து முஸ்லிம்கள் உட்பட 40 பேர் மட்டுமே அழைக்கப்பட்டார்கள். ஆனால் இப்பதவிக்கு மொத்தமாக 600பேர்தோற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்திலிருந்து 4 பேரும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து ஒருவரும் நேர்முகப்பரீட்சைக்கு கல்வி அமைச்சில் அழைக்கப்பட்டிருந்தார்கள். இதே போன்று இரண்டாந்தர அதிபருக்கான நேர்முகப் பரீட்சைச்கும் தமிழ் மாவட்டங்களிலிருந்து மிகக் குறைந்தளவு தொகையினரே அழைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அதேவேளை தமிழ் மாவட்டங்களிலுள்ள பாடசாலைகள் நிரந்தர அதிபர்கள் இல்லாது பதில் அதிபர்களுடனேயே இயங்கிவருகின்றது குறிப்பிடத்தக்கதாகும். (53)


## வியாபாரிகள் அதிகரிப்பு

(மன்னார்)

கடந்த ஏழு வருடங்களுக்குப் பின்னர் மன்னாரில் கூடுதலாகச் சிங்கள வியாபாரிகள் வருகை தந்து மரக்கறி வகைகள், பழங்கள், தேங்காய் போன்றவற்றை விற்பனை செய்துவிட்டு மீன், கருவாடு போன்ற பொருட்களைக் கொள்வனவு செய்து, அனுராதபுரம், குருநாகல், மதவாச்சி, கணேவத்த, கல்கமுவ போன்ற இடங்களுக்கு கொண்டு செல்கின்றார்கள்.

இவர்களுக்கு தற்சமயம் தலைமன்னார் கொழும்பு இரவு ரயில்சேவை இருப்பதால் மன்னார் வருவதற்கு வசதியாக உள்ளது. நீண்ட நாட்களுக்குப் பின்னர் மன்னாரில் மலைநாட்டு மரக்கறிகளும் வந்துள்ளன. (த)


# "கானகத்தில் இருந்தபோதும் நாட்டு நடப்பை அறிந்தோம்"

## பெற்றோர் - மாணவர் கூட்டத்தில் கவிஞர் புதுவை

(நமது நிருபர் கே. வி. கே. திருலோகமூர்த்தி)

''தமிழீழ விடுதலைப்புலிகளாகிய நாம் கானக வாழ்க்கையின் போது தமிழீழப்பகுதியில் நடந்த அனைத்து நடவடிக்கைகளையும் நன்கு அறிந்து வைத்துள்ளோம். இங்கு நடைபெற்ற துரோகச் செயல்களையும் துணைபோனவர்களையும் கூட நன்குஅறிந்து கொண்டுள்ளோம். எந்த இடர்களிலும் எமது இலட்சியத்தில் உறுதியாக இருப்போம், எம் தலைவர் பிரபாகரனும் மற்றும் யோகி. மாத்தயா முதலானோரும் நாட்டில் இருந்தே தமிழீழ மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை நன்கு திட்டமிட்டு அவற்றையே இன்று செயல்படுத்துகின்றன.''

இவ்வாறுகிளிநொச்சி கவின் கலைக்கல்லூரியில் நடைபெற்ற பெற்றோர் மாணவர்களடங்கிய கூட்டத்தில் சிறப்புரையாற்றுகையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை கூறினர்.

கல்லூரி நிர்வாகிகளில் ஒருவரான ஆசிரியர் திரு. மரியதாஸ் தலைமையில் கவின் கலைக் கல்லூரி அரங்கில் இக் கூட்டம் நடைபெற்றது.

### சந்திரன் கருத்து

வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன் பேசுகையில்; ''ஸ்ரீலங்கா அரசுடன் நல்ல எதிர்பார்ப்புகளை எதிர்பார்த்தே நமது முன்னணியினர் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். எந்த நிலைமைகளையும் எதிர்நோக்க நாம் தயாராக உள்ளோம். இன்றைய சூழ்நிலை தமிழீழத்தின் முடிந்த முடிவுமல்ல, நமது மண் முழுமையாக சுதந்திர மடையவேண்டும். நம் மண்ணை நாம் நல்ல முறையில் நிர்வகிக்கவேண்டும். ஆயுதங்கள் ஒப்படைப்பதும் வைத்திருப்பதும் தமிழ் மக்களின் பாதுகாப்பை பொறுத்த விஷயம். விடுதலைப்புலிகள் மக்களை பாதுகாக்கவே ஆயுதங்களை வைத்துள்ளனர் என்றார்.


## பாதுகாவலர்கள் தேவை

திருநெல்வேலியிலுள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு பாதுகாவலர்கள் தேவைப்படுகின்றனர். அனுபவமுள்ளவர்கள் 04-04-90 காலை 10.00 மணிக்கு கீழ்க் காணும் விலாசத்தில் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்: முகாமையாளர், 118, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-659)


# வடமராட்சி கிழக்கிலும் முறைசார கல்வி வகுப்புகள்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலும் இரண்டு பாடசாலைகளில் முறைசாராக் கல்வி வகுப்புக்கள் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மருதங்கேணி இந்து தமிழ் சலவன் பாடசாலையில் மோட்டார் வெளியிணைப்பு இயந்திரம் திருத்துதல் சம்பந்தமான பயிற்சி நெறியும், சுடத்தனை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தும்பு வேலை சம்பந்தமான பயிற்சி நெறியும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சியினைப் பெற விரும்புபவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன.

சனி, ஞாயிறு தினங்களில் எட்டு மாதத்திற்கு இப்பயிற்சிகள் இலவசமாக வழங்கப் படவுள்ளன. இதற்கான ஏற்பாட்டினை யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விக்கான கல்வி அதிகாரி திரு எஸ். சுப்பிரமணியம் மேற்கொண்டுள்ளார். (53)


# மக்கள் வங்கி

## அடகு நகைகள் மீளளித்தல் முல்லைத்தீவு மாவட்டம்

### திருத்தம்

ஏற்கெனவே அறிவித்ததன்படி 6-12-83 வரை முல்லைத்தீவுக் கிளையில் அடகு வைத்து அவற்றை மீளப்பெறுவதற்காக 21-9-89 வரை பணம் செலுத்தியவர்கள் நகைகளை பின்வரும் திகதிகளில் காலை 8-30 மணி முதல் பி. ப. 1-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

| வழங்கும் திகதி | கிழமை |
|---|---|
| 04-04-90 | புதன்கிழமை |
| 05-04-90 | வியாழக்கிழமை |
| 06-04-90 | வெள்ளிக்கிழமை |

## வழங்கும் நிலையம், மாங்குளம் பொலிஸ் நிலையம்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் வழங்கும் ஸ்தானத்திற்கு ஏற்பட்ட மாறுதலுக்கு வருந்துகிறோம்.

பிராந்திய முகாமையாளர்,

மக்கள் வங்கி,
வடபிராந்தியம்.

(ஏ 662)


# யாழ் கோட்டக்கல்வி போட்டியில் முதலிடம்

(தென்மராட்சி)

யாழ். கோட்டக்கல்விப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தமிழ்த் திறன் சார்பான கட்டுரை (ஆக்கம்)ப் போட்டியில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவி செல்வி பொன்னம்பலம் பகீரதி மேற்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் அங்கு நடைபெற்ற பேச்சுப்போட்டியிலும் 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவரின் திறமையைப் பாராட்டி வித்தியாலய அதிபர் ஆசிரியர்கள் கைக்கடிகாரமொன்றை பரிசாக வழங்கினர்.


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக வீடொன்றைக் குத்தகைக்குப் பெறுதல்

விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவற்காக மூன்றாண்டுகளுக்கு, குத்தகைக்கு, வீடொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படுகின்றது. குத்தகைக்கு கொடுக்கப்படவுள்ள வீடு பின்வரும் தேவைகளைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

1. பல்கலைக்கழகத்தில் திருநெல்வேலி வளாகத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்துள் அமைந்திருத்தல் வேண்டும்.
2. தளப்பரப்பு 150 சதுர மீற்றர்களுக்கு குறைவாக இருத்தலாகாது.
3. குறைந்த பட்சம் மூன்று படுக்கை அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. வீட்டின் முன்பக்கம் வாகனங்கள் தங்கி நிற்குமிடவசதி, பூந்தோட்ட இடவசதி என்பனவற்றை உடையனவாய் இருத்தல்வேண்டும்.
5. கிணறு, மின்சாரம், குழாய் நீர் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. குத்தகைக் காலத்தின்போது சிறிய திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையைப் பல்கலைக் கழகம் கொண்டிருத்தல் வேண்டும்.

வீட்டைக் குத்தகைக்கு விட விரும்புவோர் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தின் அளவைக் கடிதத்தில் குறிப்பிட்டு 1990-04-20ஆம் தேதிக்கு முன்னர் நிதியாளர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வீட்டைக் குத்தகைக்கு விடல்'' என எழுதப்படல் வேண்டும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
03-04 1990.

(எ 664)

# தென் ஆபிரிக்காவில் கறுப்பினத்தவரிடையே பெருங்கலவரம்:

# நட்டால் கிராமத்திற்கு இராணுவம் விரைவு

## 70 பேர் பலி

(ஜொகனஸ்பேர்க்)

**தென் ஆபிரிக்காவில் 'எடேன்டேல்' நகரில் கிராமம் ஒன்றில் கறுப்பினத்தவரிடையே இடம்பெற்ற பெரும் கலவரத்தையடுத்து அப்பகுதிகளுக்கு பெருமளவு இராணுவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக்கலவரத்தால் இதுவரை 70 பேர் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். வீடுகள் கட்டிடங்கள், கடைகள் பலவும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.**

'நட்டால்' என்னும் கிராமத்தில் கறுப்பினத்தவர்களிடையே அரசியல் காரணங்களுக்காக மேற்படி கலவரம் இடம்பெற்றுள்ளது. இக்கலவரத்தில் துப்பாக்கிகள், கத்திகள், கோடரிகள் பாவிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலவரம் கடந்த மூன்று நாட்களுக்கு மேல் நடைபெற்றுள்ளது. இதன்போது அங்கு சென்ற இராணுவம் மீதும் கலகக்காரர்கள் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதையடுத்து இராணுவமும் கலகக்காரர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டது. இதில் இருபதுவரை பேர் கொல்லப்பட்டனர்.

தற்போது இப்பகுதியில் பெருமளவு இராணுவம் நிலைகொண்டுள்ளதுடன் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றது. நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டபோதிலும் பெரும் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கலவரத்தையடுத்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உப தலைவர் திரு. நெல்சன் மண்டேலா சம்பவம் இடம்பெற்ற 'நட்டால்' கிராமத்திற்கு நேரடி விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். (சி)

## பாசறை விழாவை சிறப்பாக கொண்டாட முடிவு

(காங்கேசன்துறை)

''ஒழுக்கம் கட்டுப்பாடு என்னும் நற்பண்புகளை வளர்த்து நற்பிரஜைகளை உருவாக்குவதில் சாரணீயம் பெரும் பங்கு வகிக்கிறது சாரணீயத்தில் பங்குபற்றி சான்றிதழ்களைப் பெறுவது மட்டும் குறிக்கோளாக இல்லாமல் இவ்வியக்கத்தை கட்டிவளர்க்க சாரணர்கள் தமது பங்கை ஆற்ற வேண்டும்''

இவ்வாறு காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றிய காங்கேசன்துறை மாவட்ட சாரண ஆணையாளர் திரு. நா போஜன் கூறினர்.

மாவை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காங்கேசன்துறை மாவட்ட சாரண பிரிவின் 10-வது ஆண்டையொட்டி பாசறை விழாவினை சிறப்பாக நடத்துவதெனவும் சாரணர் தொகையை அதிகரிப்பதெனவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

(5ம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் வாயுநிலையத்தில் பலத்த வெடிவிபத்து! பொதுமக்கள் கடும் பாதிப்பு

(சிட்னி)

ஆஸ்திரேலியாவில் சிட்னி விமான நிலையத்திற்கருகேயுள்ள 'எரிபொருள் வாயுத் தொழிற்சாலை' ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தால் அதைச் சுற்றியுள்ள பல பகுதிகளிலும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதுடன் 'சிட்னி' விமானநிலையத்திலும் வெடித்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இத்தொழிற்சாலையில் எரிபொருள் வாயுக் கசிவு ஏற்பட்டதையடுத்து அங்கு பெரும் தீ விபத்து ஏற்பட்டதாகவும் இதையடுத்து பல வெடிவிபத்துக்கள் இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதியிலிருந்து வெளியேறியுள்ளனர். சிட்னி விமான நிலையமும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விமான நிலையம் தற்காலிககாக மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் வாயு அடைக்கப்பட்டிருந்த பல கொள்கலன்கள் வெடித்துச் சிதறியதில் தொழிலாளிகள் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் அப்பகுதியில் தீ பரவியுள்ளதால் இதன் சரியான விபரம் எதுவும் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது. தீ அணைப்பு வேலைகள் மும்முரமாக நடைபெற்றுவருகின்றன. (சி)

### கிரிக்கெட்

## உலகத் தெரிவு அணி தொடரில் வெற்றி

(வெலிங்டன்)

நியூஸிலாந்து கிரிக்கெட் வீரர் ரிச்சர்ட் ஹட்லி 'நிதி சேகரிப்பு' கிரிக்கெட் போட்டி தொடரில் உலகத் தெரிவு அணி 3 - 1 என்ற ரீதியில நிஸிலாந்து அணியை தோற்கடித்துள்ளது.

நடைபெற்ற நான்கு போட்டிகளில் முதல் மூன்றில் உலகத் தெரிவு அணியும், இறுதிப் போட்டியில் நியூஸிலாந்து அணியும் வெற்றிபெற்றன.

உலகத் தெரிவு அணிக்கு இந்திய முன்னாள் அணித்தலைவர் சுனில் கவஸ்காரும் நியூஸிலாந்து அணிக்கு ரிச்சர்ட் ஹட்லியும் தலைமைதாங்கினர். தொடரின் சிறந்த ஆட்டக்காரராக மே. இந்தியத் தீவு முன்னாள் அணித்தலைவர் அல்வின் களிச்சரன் தெரிவு செய்யப்பட்டார். (சி)

## 'வலம்புரி' சேவையில் ஈடுபடும்

(நெடுந்தீவு)

குறிகாட்டுவான் - நெடுந்தீவு பிரயாண சேவையில். புதிய படகு ஒன்றை விரைவில் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாக பெருந்தெருக்கள் அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

'வலம்புரி' என அழைக்கப்படும் இந்தப் படகில் 100 பிரயாணிகள் செல்லமுடியுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (133)

## மாடிக் கட்டிடங்களுக்கிடையில் நீளம் பாய்ந்து உலக சாதனை!

(ரொறன்ரோ)

அறுபதடி உயரமான கட்டிடமொன்றிலிருந்து இடையில் 21 அடி அகல இடைவெளியில் உள்ள மற்றுமொரு 60 அடி உயரமான கட்டிடத்திற்கு பாய்ந்து இளைஞர் ஒருவர் உலக சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார். இச்சாதனை கனடாவில் ரொறன்ரோ நகரில் கடந்த வியாழக்கிழமை ஏற்படுத்தப்பட்டது.

கனடாவைச்சேர்ந்த ஸ்ருன் மன்ரேய் (வயது 26) என்ற இந்த இளைஞரே இச்சாதனையை ஏற்படுத்தியுள்ளார். 60 அடி உயரமான ஐந்து மாடிக் கட்டிடத்திலிருந்து 21.3 அடி இடைவெளியிலுள்ள மற்றுமொரு 60 அடி ஐந்துமாடிக் கட்டிடத்திற்கு பாய்ந்தே அவர் இச்சாதனையை மேற்கொண்டார் இதற்கு முன் இதைவிட குறைந்த உயரமான மாடியிலிருந்து 19 அடி அகல இடைவெளிக்கு பாய்ந்தே சாதனை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இவ்விளைஞர் இச்சாதனையை மேற்கொண்டபோது இவரது தாயும் தந்தையும் கீழே நின்று பார்த்த வண்ணமிருந்தனர். மகனின் இந்த விஷப் பரீட்சை தமக்கு சற்றும் பிடிக்கவில்லை என்றும் அவரது பிடிவாதத்தால் தாம் ஒன்றும் செய்ய இயலவில்லை என்றும் கூறிய பெற்றோர்கள் இச்சாதனையையிட்டு பெருமிதமடைந்துள்ளனர்.

மேலும் இச்சாதனை நிறைவேற்றப்படும்போது 'கின்னஸ்' சாதனைகள் பதிவாளர்களும் நூற்றுக்கணக்கான பார்வையாளர்களும் நேரில் பார்வையிட்டனர். (சி)

## மட்டக்களப்பு மாவட்டம் 'நொருட்' உதவியுடன் புனரமைப்புத் திட்டம்

(மட்டக்களப்பு)

நோருட் நிறுவனத்தின் உதவியுடன் ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு மாவட்டத்தில் 157 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன் தெரிவித்தார்.

கோறளைப்பற்று, கோறளைப்பற்று வடக்கு ஆகியபகுதிகளில் பதினையாயிரம் ரூபா மானியத் திட்டத்தின் கீழ் ஐயாயிரம் வீடுகளை அமைக்க 75 மில்லியன் ரூபாயும், உற்பத்தி திறன் வாய்ந்த முயற்சிகளுக்கான நிவாரணத்திட்டத்தின் கீழ் தலா நாலாயிரம் ரூபா வீதம் பதினையாயிரம் மீனவர்களுக்கு 60 மில்லியன் ரூபாயும் வழங்கப்படவுள்ளது.

மட்டக்களப்பில் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்க ஆறுமில்லியன் ரூபாவும் மட்டக்களப்பு பொது வைத்தியசாலை திருத்த வேலைகளுக்கு 13 மில்லியன் ரூபாவும் பொதுச் சந்தை திருததவேலைகளுக்கு மூன்று மில்லியன் ரூபாவும் செலவிடப்படும். (121)

## மட்டக்களப்பு யாழ். பஸ் சேவை

(மட்டக்களப்பு)

இரண்டு வருடகால இடைவெளியின் பின்னர் மட்டக்களப்பு-யாழ்ப்பாணம் இரவு பஸ்சேவை இம் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும், மட்டக்களப்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே ஒரு சாதாரண பஸ் சேவையும் ஒரு சொகுசு பஸ் சேவையும் மட்டுமே பகலில் நடைபெற்று வந்தது. ஏப்ரல் முதல் பகல் சொகுசு பஸ்சேவை நிறுத்தப்பட்டு இரவுச்சேவையாக நடைபெற்று வருகிறது.

மட்டக்களப்பு-மன்னார் பஸ் சேவையும் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (121)

## பொலிஸ்பயிற்சி கல்லூரிமுன் கார் குண்டு வெடிப்பு!

### 10 பொலிஸார் பலி

(சன்சல்வடோர்)

எல்சல்வடோரில் பொலிஸ் பயிற்சி நிலையம் ஒன்றின் அருகே கார்க்குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றதில் பயிற்சியிலீடுபட்டிருந்த பத்து பொலிஸார் கொல்லப்பட்டனர். 25 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர்.

அதிகாலை வேளையில் இப்பயிற்சிக்கல்லூரி அருகேவந்து நின்ற காரொன்றிலிருந்தே இக்குண்டு வெடித்துள்ளது. இக்குண்டு குறித்த நேரத்தில் வெடிக்குமாறு வைக்கப்பட்டிருந்தது. பொலிஸ் மா அதிபரை கொல்லும் முயற்சியாகவே இதனை பொலிஸார் கருதுகிறார்கள்.

இக்குண்டு வெடிப்பிற்கு அங்கு கெரில்லா போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இடதுசாரி தீவிரவாதிகளே காரணமென இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து கெரில்லாக்கள் மீதான தமது தாக்குதல்களை முப்படையினரும் தீவிரப்படுத்தியுள்ளனர். நேற்று இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் பத்திற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

### மணிவாக்கு

தவறு செய்தல் மனித சுபாவம், ஒருவர் தனது தவறை ஒப்புக்கொண்டு அதை மீண்டும் செய்யாதிருப்பது மனிதத் தன்மையாகும்.

—மகாத்மா காந்தி

# நமது நோக்கு

## 270,630,000,000

இதனை எண்ணிப் பாருங்கள்! ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லட்சம், கோடி...இது பழைய எண்ணும் முறை. சர்வதேச அலகில் மில்லியன், பில்லியன், ரிறில்லியன் வந்துவிட்டன.

இந்த எண் என்ன? எமது நாட்டின் வளர்ச்சிக்கென்று நாம் தேடி வைத்திருக்கும் 'சொத்து', ரூபாயில்.

அதாவது, பொதுக்கடன். உள்நாட்டவருக்கும் வெளிநாட்டவருக்கும் கொடுக்கவேண்டியது இதுவும் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னைய கணக்கு!

இன்னொரு வகையிற் கணக்கிட்டால், இலங்கையின் ஒவ்வொரு நபரும் (பாவம், பிறந்து கொண்டிருக்கும் குழந்தைகள் உட்பட) கட்ட வேண்டிய கடன் 15,300 ரூபா.

இதிலே, அறுபது சதவீதத்திற்கு மேல் பிறநாட்டுக் கடன். அந்நிய நாட்டு நிதிஉதவியில்லாமல், மூன்றாவது உலக அணியிற் சேர்ந்துள்ள எமது நாடு விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றில் முன்னேற்றம் காண முடியாது. ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான்!

ஆனால், பெற்ற கடன் அத்தனையும் மூலதனச் செலவுக்கான, பொருளாதார அபிவிருத்திக்கான, கடன்களா?

குறிப்பாக 1960ஆம் ஆண்டுக்குப் பின், அன்றாட நுகர்ச்சிக்கு அவசியமான பொருட்களை இறக்குமதி செய்யவும் அந்நியக் கடன்வசதி பயன்பட்டு வருகின்றது.

இராணுவச் செலவுக்காகப்பட்ட கடன்? அது இராணுவ இரகசியம்; முழுக்கதையும் எமக்குத் தெரியாது!

பெற்ற கடன்களுக்கான வட்டித் தொகையும் அதிகரித்து வருகின்றது; கட்ட வேண்டிய தவணைகளும் நெருங்கி வருகின்றன.

எமது ஏற்றுமதியின் 28 சதவீதமே கடன் கட்டப் பயன்படுவதாக இன்னோர் தகவல். காரணம்? கடன் பளு அதிகரிப்பு; உற்பத்திப் பாதிப்புகளால், ஏற்றுமதி எதிர்பார்த்தளவு அதிகரிக்காமை.

இதேவேளை, கடன்தரும் நாடுகளிடமிருந்தே நுகர்ச்சிப் பொருட்களையும் வாங்கவேண்டிய அவலநிலை.

இதைவிட, கடன் தரும் நாடுகளும், சர்வதேச நிறுவனங்களும் விதிக்கும் நிபந்தனைகள்.

இன்று நிதியமைச்சின் செயலாளர் இங்கில்லை; மேலும் கடன்பெற ஒரு குழுவோடு வெளிநாடுசென்றுவிட்டார்.

அந்த 'யாசகக்குழு' போகுமுன், மாவின் விலை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது; தனியார் மயப்படுத்தல் போன்ற வேறு சில நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் என உறுதியளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலை தொடரவேண்டுமா? அந்நியக் கடனை நாடுவதைக் குறைத்து, அந்நியச் செலாவணியைக் கூட்ட முயற்சிக்கவேண்டும். அதற்கு உற்பத்தி பெருகவேண்டும்; அதற்கு நாட்டிலே அரசியல் அமைதி வேண்டும்.

சிறுபான்மையினரின் உரிமைகளை அளிக்காது, நசுக்குவதிற் கவனம் சென்றால், அதற்காகக் கோடிகளைக் கொட்ட நினைத்தால், பொதுக்கடன் சுமை மேலும் மோசமாகலாம்.

இதனைக் கருத்தில் எடுத்து, காலம் தாழ்த்தாது, தமிழ் பேசும் மக்கள் கௌரவமாக, உரிமையோடு, பாதுகாப்பாக வாழ ஆவன செய்யவேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

### றமழான் சிந்தனை

## உணவில் அபிவிருத்திஏற்பட

''நிச்சயமாக அல்லாஹவும் அவன்மலக்கு (வானவர்)களும் ஸஹர் சாப்பிடுபவர்களின் மீது ரஹ்மத் அருள் சொரிகின்றனர்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். 'நபி ஸல் அவர்கள்யாராகிலுமொரு ஸகாபியை(தோழரை) ஸஹர் சாப்பிட அழைத்தால், வாருங்கள் பரகத்தான அபிவிருத்தியான ஆகாரத்தை உண்ணுங்கள் என்று கூறுவார்களாம்.''

''நபி (ஸல்) அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்த சமயம், ஒரு ஸகாபி (தோழர்) சென்றதற்கு இது அல்லாஹ் உங்களுக்கு அருளிய பரகத்தான (அபிவிருத்தியான) ஆகாரம் இதை சாப்பிடாமல் இருந்துவிடாதீர்கள்'' என்று உபதேசித்ததாக அப்துல்லாஹ இப்னு ஹாரித் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்!

### நோன்பு தொழுகை நேர அட்டவணை

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4-34 |
| சுபஹு | 4-49 |
| சூரிய உதயம் | 6-09 |
| லுஹர் | 12-20 |
| அஸர் | 3-22 |
| மஃரிப் | 6-21 |
| இஷா | 7-41 |

### முச்சந்தியில் மூன்று பேர்

# 'மா'விலை கூடிப்போச்சு....

# விலைவாசிகழுத்தைநெரிக்குது

அண்மையில் 'மா'வின் விலை தொண்ணூறு சதத்தாலும், பாணின்விலை முப்பது சதத்தாலும் அதிகரித்தது. இந்த விலைவாசி உயர்வைப் பற்றி மூவரிடம் கேட்டோம். அவர்கள் கருத்து இவைகள்;

நல்லூரைச் சேர்ந்த எஸ். இராசேஸ்வரி என்பவர் சொல்கிறார்;

''எங்களுக்கு ஆறு பிள்ளைகள். நானும் அவரும் என்னுடைய ஐயாவும் அம்மாவும் மொத்தத்தில் நாங்க பத்துப் பேர் எங்க குடும்பத்தில் நாங்க ரெண்டு நேரமும் மா பாவிக்கிற பழக்கத்தை வைச்சிட்டோம். அடிக்கடி மாவுக்கு விலை கூடுகிறபடியால் இந்த மாப்பண்டத்தையே விட்டிடுவோமோ என்று யோசிச்சம். ஆனால் பிள்ளைகள் இடம் கொடுக்கிறாங்களில்லை. மூணு நேரம் சோறில்லாம மாப்பண்டத்தில ஏதும் சரிப்பண்ணினா அவங்களுக்கிருக்கிற புளுகம் சொல்லிக்கொள்ள ஏலாது.

ஒரு நாளைக்கு எங்களுக்கு இரண்டரைக் கிலோ மா வேணும். முப்பத்திமூன்று ரூபா எழுபத்தைந்து சதம் அதுக்குப் புறம்பாக வைக்க வேணும். பிட்டுக்கு தேங்காய்க்கு ஐந்துரூபா. அது இது என்று காலமைக்கும் பின்னேரத்துக்கு ஐம்பது ரூபா வேணும். அவர் கொண்டுவாற ஒரு நாளைக்கு அறுபத்தைந்து ரூபா உழைப்பில் எப்பிடி சீவிக்கிறது. விலைவாசி கழுத்தை நெரிக்குது. ஒவ்வொருநாளும் கஷ்டத்தில் தான் வாழுறம். இதைப் பத்திரிகையில எழுதுங்க..'' என்கிறார்.

'மா' விலை பற்றி ஹோட்டல் காரர் சதாசிவம் அழாக் குறையாகச் சொன்னார்.

''ஹோட்டல் காரங்களுக்கு ஒரு கெட்ட பேர் இருக்கு. இடியப்பத்துக்கு விலை கூட்டினாலும் 'மா'விலை குறைஞ்சா பலகாரங்களுக்கு விலை குறைக்கினமில்லையென்று...

இப்ப பாருங்க ஒரு கிலோ 'மா' விலை முப்பது முப்பத்தைந்து இடியப்பம் அவிக்கலாம். ஒரு இடியப்பம் எழுபது சதமாக விக்கிறம். மொத்தத்தில் எவ்வளவு கிடைக்குது பாருங்க. இடியப்பத்துக்கு ஒரு சொதி, சம்பல் இல்லாட்டால் சாம்பாறு... மரக்கறி விலை கூடின காலத்தில இதை எப்படி சமாளிக்கலாம் பாருங்க ஏதோ நாங்கள் அள்ளிறம் என்ற பேர்தான். மொத்தத்தில் சைபர்தான்.

'மா'விலை குறைஞ்சிருந்த அந்தக்காலத்தில் உழைச்சனாங்கள் தான். இல்லையெண்டு சொல்லவில்லை. இப்பஒண்டும் செய்ய ஏலாது... நாங்களும் பிள்ளை குட்டிக்காரர்கள் தானே. மீண்டும் 'மா'விலையேற்றமா? அப்பப்பா எங்களால் தாங்கிக்கொள்ள ஏலாது''

பேக்கரிச் சொந்தக்காரர் சுவாமிநாதன் சொல்கிறார்;

''பாண் கவுண்மேந்து சொன்ன கணக்கில் சரிப்பண்ண ஏலாதுஎன்று கொழும்பில் உள்ள பேக்கரிக்காரர்கூட முறையிட்டிருக்கிறாங்கள். எங்கட சங்கம் கூட 350 கிறாம் பாணைப்போட்டாலும் ஒரு மூடை மாவில் தொண்ணூற்றொரு ரூபா தொண்ணூற்றைந்து சதம் நட்டம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இப்படியிருக்க பேந்தும் ஒரு கிலோ மா தொண்ணூறு சதத்தால் விலைகூட்டியாச்சு. பாணுக்கு முப்பதுசதம் கூட்டியிருக்கிறார்கள். எப்படிப்பாண் போடுவது? தலையைச் சுத்துது. இதுக்கு கவுண்மேந்து பேக்கரிக்காரங்களுக்கு ஓரளவு பாண்போடத் தக்கதாக விலை கூட்டித்தர ஏற்பாடுபண்ண வேணும் இல்லாவிட்டால் எங்களுக்கு நட்டம் தான்.''

சந்திப்பு: மணிசேகரன்

### மஹா கும்பாபிஷேகம்

(பண்டத்தரிப்பு)

பெரியவிளான் வடசேரி விக்கினேஸ்வரர் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட புனருத்தாரண வேலைகள் யாவும் நிறைவுபெற்றதைத் தொடர்ந்து இம்மாதம் 11-ம் திகதி புதன்கிழமை மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவுள்ளது. முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ தா. சர்வேஸ்வரக் குருக்கள் தலைமை பிரதிஷ்ட குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடாத்திவைப்பார். (72)

# மக்கள் கருத்து

### கவனம் எடுக்குமா?

பின்தங்கிய கிராமமாகிய நீலிப்பத்தனையையும் காரைநகர் கிராமசபை கவனத்துக்கு எடுக்குமா? வீதிகள் புனரமைப்புச் செய்து தார் ஊற்றுதல் செய்யுமா? விளையாட்டு மைதானத்துக்கு வேண்டிய பொருட்கள், ஊஞ்சல்கள் பிள்ளைகளுக்கு நட்டு வைக்குமா? யாழ்ப்பாணமா மாநகர சபை சுப்பிரமணியம் பூங்காவில் வைச்சிருப்பது போல் பூமரங்கள் நட்டு அழகு செய்யுமா? படியன வேலைகளையும் கவனத்துககுகொண்டு வந்து செய்து தரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்

க. பரமலிங்கம்.
காரைநகர்-

## "இறைபணியின் மூலம் இறைவனைக் காணமுடியும்"

(யாழ்ப்பாணம்)

''தோமஸ் முனிவரின் தூய வாழ்வும், சிறப்பான குணதிசயங்களும் எம்மால் பின்பற்றப்படவேண்டியவை. முனிவர் மக்களின் நல்வாழ்விற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். இறைபணியில் எம்மை ஈடுபடுத்துவதன் மூலம் இறைவனைக் காணமுடியும் என உணர்த்தியவர்''

இவ்வாறு அருட்திரு ஏ எம். ஸ்ரீபன் அடிகளார் பலாலி தோலகட்டி றேசரியன் ஆச்சிரமத்தில் தோமஸ் முனிவரின் 104-வது பிறந்த தினத்தன்று கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்,

இலங்கையில் தோமஸ்முனிவரினால் அமைக்கப்பட்ட ஆச்சிரமங்களில் பெண்களுக்கு 5 ஆச்சிரமங்களும், ஆண்களுக்கு 3 ஆச்சிரமங்களும் உள்ளன என்றும், இந்தியாவில் பெண்களுக்கு 6ஆச்சிரமங்களும், ஆண்களுக்கு 9 ஆச்சிரமங்களும் உள்ளன என்றும் அவர் கூறினார்,

தோலகட்டி ஆச்சிரமத்திலுள்ள அருட்திரு தோமஸ் முனிவரின் கல்லறைக்கு மக்கள் சென்று தரிசித்தனர்.

தோமஸ் கல்வி நிலையத்தின் இரண்டாவது வருடாந்த விழாவும் இடம்பெற்றது. அருட்திரு ஸ்ரீபன் அடிகளார் ஏழைகளுக்குப் பரிசுகள் வழங்கினார். (54-த)

### போக்குவரத்து கஷ்டம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தைக்கு முன்பாக சந்தை நேரத்தில் சைக்கிள்களும் மற்றும் வாகனங்களும் நிறுத்தப்படுவதால் பிரதான வீதியால் செல்லும் மக்களும் வாகனங்களும் போக்குவரத்துச் செய்வதில் பலத்த நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

சில புடவை விற்பனையாளர்கள் சந்தை வாசலில் வைத்து வியாபாரம் நடாத்துவதாலும் மக்களின் போக்குவரத்துக்கு சிரமம் ஏற்படுகின்றது. சந்தையை நிர்வகிக்கும் பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலக அதிகாரிகள் இது பற்றி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. (72)

# பலதும் பத்தும்

### செவ்வாய் தோஷமும் குருதியும்

இது பற்றிச் சில நாட்களுக்கு முன் குறிப்பிட்டிருந்தோமல்லவா? சங்கானை மேற்கைச் சேர்ந்த செல்வி ச. இராஜினி, Rh பற்றி விளக்கம் கேட்டிருக்கிறார்.

A, B, AB, O வைவிட, புரதம் காரணமாகவும் குருதியில் வேறுபாடுகள் உண்டு. இது றீசஸ் (Rhesus) என்னும் குரங்கிலிருந்து கண்டறியப்பட்டதால் Rh காரணி எனப்பட்டது.

85 சத வீதமான மக்களில் Rh காரணி உண்டாம். இவர்களை Rh+ கூட்டமாகவும் ஏனைய 15 சத வீதத்தினரை Rh- கூட்டமாகவும் வகுத்துள்ளார்கள்

Rh+ கூட்டம் Rh+ கூட்டத்திற்குக் குருதி வழங்கலாம். Rh+ குருதியுள்ளவர்கள் Rh- குருதியுடையோருக்கு வழங்கினாற்பிரச்சனை தான்! தாய் Rh- ஆகவும் குழந்தை Rh+ ஆகவும் இருப்பின், குழந்தையின் குருதி தாயின் குருதிக்குள் கசிந்து செல்லக்கூடும். இதனால் ஏழாம், எட்டாம் மாதத்தில் சிசு இறக்க நேரிடுமாம்.

வியாழன், சுக்கிரன், சந்திரன் போன்ற நற்கிரக பார்வைகளாலும் செவ்வாய் தோஷம் குறைவுபடும் என்பது சோதிட நூல்கள் தரும் விதி.

கிரக பார்வை போல, சிறந்த மருத்துவர்களின் 'பார்வையாலும் Rh - க்கு நிவாரணம் கிடைக்குமல்லவா?

வாணி

## கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு சைக்கிள் பவனி

# சாரணர் குழுவின் சமாதானச் செய்தி

# ஜனாதிபதி பிரேமாவிடம் கையளிப்பு!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட சாரணர் பிரிவினரும் பளை மகாவித்தியாலய சாரணர் பிரிவினரும் தமது 7-வது வருடாந்த விழாவை முன்னிட்டு, சமாதானச் செய்தி ஒன்றை இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா அவர்களிடம், எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டுத் தினத்தன்று கையளிக்கும் முகமாக கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு சைக்கிளில் செல்லவிருக்கின்றார்கள்.

சமாதானச் செய்தியை தாங்கிச் செல்லும் ஒன்பது பேர் கொண்ட குழுவுக்கு திரு. எம். புவனேந்திரன் தலைமை தாங்குவார்.

மேற்படி சாரணக்குழுவினர் எதிர்வரும் 9-ம் திகதி காலை பளையிருந்து புறப்பட்டு 12-ம் திகதி கொழும்பைச் சென்றடைவார்கள். இக்குழுவினர் எடுத்துச்செல்லும் சமாதமானச் செய்தியில் பொது ஸ்தாபனங்களினதும், பத்திரிகை ஸ்தாபனங்களினதும் வாழ்த்துச் செய்திகளும் உள்ளடக்கி இருக்கும்.

கொழும்பு செல்லும் இக்குழு எதிர்வரும் 9-ம் திகதி காலை 6-30 மணிக்கு பளை மகாவித்தியாலயத்திலிருந்து புறப்படுவார்கள். இவர்களை கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு. கே. கோபாலகிருஷ்ணன், உதவி ஆணையாளர், மாவட்ட சாரணர் தலைவர் திரு. ஏ. பி. செல்லையா, பளை உதவி அரசாங்க அதிபர், கல்வி இலாகா அதிகாரிகள் உட்பட மற்றும் பலரும் சேர்ந்து இவர்களை வழியனுப்பிவைப்பார்கள்.

9-ம் திகதி காலை பளையிலிருந்து புறப்படும் இக்குழுவினர், பளை, ஆனையிறவு, கிளிநொச்சி, மாங்கும், புளியங்குளம் ஊடாக வவுனியாவை சென்றடைந்து அங்கு இரவு தங்குவார்கள்.

10-ம் திகதி காலை 6-30 மணிக்கு வவுனியாவிலிருந்து புறப்பட்டு மதவாச்சி, நோச்சிகாமம் ஊடாக புத்தளத்தைச் சென்றடைந்து இரவு அங்கு தங்குவார்கள்.

11.ம் திகதி காலை புத்தளத்திலிருந்து புறப்பட்டு சிலாபம், வென்னப்புவா ஊடாகச் சென்று நீர்கொழும்பை அடைந்து அங்கு இரவு தங்குவார்கள்.

12-ம் திகதி காலை நீர்கொழும்பிலிருந்து புறப்பட்டு கட்டுநாயக்கா, ஜா-எல்லை ஊடாகச்சென்று கொழும்பை அடைவார்கள்.

13-ம் திகதி இக்குழுவினர் கொழும்பிலுள்ள பத்திரிகை ஸ்தானங்கள், வானொலி நிலையம், தொலைக்காட்சி நிலையம் ஆகியவற்றுக்குச் சென்று சமாதானச் செய்திகளைச் சேகரிப்பதில் ஈடுபடுவார்கள். கொழும்பிலும் இக்குழுவினர் சைக்கிள்களிலேலே மேற்கூறப்பட்ட இடங்கள் அனைத்துக்கும் செல்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

## உணவுமுத்திரை வழங்கப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

சமூகசேவைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் 5 வது தொடர்ச்சி உணவுமுத்திரைகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. (153)

## பாசறை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: நா. போஜன், உப தலைவர்: என். கனகரத்தினம், செயலாளர்: செல்வி ந யோகராணி, உப செயலாளர்: க. இராஜகோபால், பொருளாளர்: செல்வி செ. அருந்ததி நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (85)

# கிழக்குச் செய்திகள்

### அபிவிருத்தி வேலைகள்

[மட்டக்களப்பு]

செயலிழந்த நிலையிலிருந்த கல்குடாத் தொகுதியிலுள்ள கிளிமுட்டி பண்ணையை வடக்குக்கிழக்கு மாகாண சபை பொறுப்பேற்றுள்ளதைத் தொடர்ந்து, பண்ணையில் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்வுள்ளன.

### குடிநீர் வசதி

கல்முனை தேசிய வீடமைப்பு அதிகார சபையின் செயலகத்தில் குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. உடனடியாகக் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்குமாறு, இங்குள்ள காரியாலய அதிகாரிகள், தேசிய வீடமைப்பு அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### கோரிக்கை

கிண்ணியா-கந்தளாய் பஸ் சேவையைத் தம்பலகாமம் ஊடாக ஆரம்பிக்குமாறு திருகோணமலை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் கந்தளாய் டிப்போ அத்தியட்சகரிடம் கோரியுள்ளது

முன்னர் இடம்பெற்றுவந்த இந்தப் பஸ்சேவை இடையில் நிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### விளையாட்டுப் போட்டி

மட்டக்களப்பு முதன்மைப் பாடசாலைகளில் ஒன்றான புனித சிசிலியா மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றது. சுமார் 6 வருடகால இடைவெளிக்குப்பின் மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

### குளிர்சாதனப் பெட்டி

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் கடந்த 4 வருடங்களாகச் செயல்படாத நிலையில் காணப்பட்ட பிரேத அறைக் குளிர்சாதனப் பெட்டிகள் தற்போது மீண்டும் செயல்பட ஆரம்பித்துள்ளன. மேற்படி குளிர்சாதனம் 25 வருடங்கள் பழமை வாய்ந்தவை. புதிய யந்திரங்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. கிழக்கு இலங்கைப் புனர்வாழ்வுக் கழகம் இவற்றைத் திருத்தம் செய்து பயன்படுத்த 35,000 ரூபா அன்பளிப்புச் செய்திருந்தது.

### 3 பஸ்கள் மட்டும் சேவை

அக்கரைப்பற்றுப் பகுதியில் பஸ்சேவை முற்றாகச் சீர்குலைந்துள்ளது. இங்குள்ள டிப்போவில் சேவையில் ஈடுபட 23 பஸ் வண்டிகள் தேவை. ஆனால் 10 பஸ் வண்டிகள் மட்டுமே சேவையில் ஈடுபட்டு வந்தன. கடந்த ஒரு மாதகாலமாக 3 பஸ் வண்டிகளுடன் தான் இந்த டிப்போ செயல்படுகின்றது. இந்த 3 பஸ் வண்டிகளினதும் சேவைக்கு இந்த டிப்போவில் 210 பேர் உள்ளனர்.

### பயிற்சி

மட்டக்களப்பு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், பாலமீன்மடு, நாவலடி ஆகிய இடங்களில் பெண்களுக்கு வருவாய் பெருக்கும் திட்டத்தின் கீழ் மாசிமீன், மீன் அச்சாறு செய்தல் என்பவற்றில் பயிற்சிகளை வழங்கி வருவதாக மட்டக்களப்பு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் திட்ட நிறைவேற்று அதிகாரி திரு. எஸ். பிரேமகுமார் தெரிவித்தார். இந்நிதியம் கிராமப்புறங்களில் முதலுதவிப் பயிற்சி வகுப்புக்களையும் நடாத்திவருகின்றது.

### சூழல் அபிவிருத்தி

சூழலை அழகுபடுத்துவதற்கு வீதிச் சுத்தம் செய்தல், மரங்கள் நாட்டுதல் போன்ற செயல்களுக்காக, மத்திய சூழல் அபிவிருத்தி அதிகார சபை, மட்டக்களப்பு சூழல் அதிகார சபைக்கு ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. (பூ)

### கரிகாலன் பேச்சு

தற்போது விடுதலைப் புலிகள் பலம்பொருந்திய ஓர் அமைப்பாக மாறிவிட்டது என்றும் தமிழ் மக்களின் சகல உரிமைகளையும் வென்றெடுக்க அனைவரும் பாடுபடவேண்டும்'' என்றும் கொக்கட்டிச் சோலையில் அண்மையில் நடைபெற்ற கட்சியின் கூட்டத்திற்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு எஸ். கரிகாலன் குறிப்பிட்டார். (க)

## ராசி பலன்

புதன்கிழமை
04- 04- 1990

மேடம்; உறுதிநிலை, வீண் பழி கேட்டல், புதிய இடம், செலவு.

இடபம்: அன்பின்மை, அதிக யோசனை, தன இலாபம், தூரத்துச்செய்தி, சங்கடம்.

மிதுனம்: சத்துருபீடை, தனித்தவர் நிலை, மனக்குமுறல், குடும்பச் செலவு, கௌரவம்.

கடகம்: வீண்பொழுது, போக்குவரத்தில் கஷ்டம். கொண்டாட்டம், வாக்கு வசீகரம், அலைச்சல்.

சிங்கம்: பணக்கஷ்டம், வீண்பழி கேட்டல், வயிற்று நோ, ஆலய தரிசனம், உறவினர். வருகை.

கன்னி: வீண்பழி கேட்டல், சஞ்சலம். போசனக் குறைவு, குடும்பச் செலவு, பயம்.

துலாம்: வாக்குக் கலகம், சத்துருபீடை, வேலையாட்களால் தொல்லை, பெரியோர் உதவி, மனமாற்றம்,

விருச்சிகம்: உடல்நிலை பாதிப்பு, நன்மதிப்பு, நண்பர்வரவு, பணவரவு சிந்தனை.

தனுசு: தெய்வழிபாடு, பயம், பிரயாசை மிகுதி, ஏமாற்றம்.

மகரம்: படபடப்பு, புதியவர் வருகை, இடமாற்றம், ஏமாற்றம்.

கும்பம்: கவலை, தெய்வ சிந்தனை, உதவிகள் கிடைத்தல, காரியவெற்றி.

மீனம்: ஏமாற்றம், பொறுப்பு நிற்றல், தொழிலாளர் எதிர்ப்பு, சோம்பல்.

இ. மகாதேவா.

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் மகோற்சவத்தின் 7-ம் திருவிழாத் தினமான இன்று விசேஷ மேளக் கச்சேரியும் இரவு 6 30 மணிக்கு திரு. மு சிவானந்தம் 'விஞ்ஞான நோக்கிற் சமயம்' என்னும் பொருள் பற்றிசொற் பொழிவு ஆற்றுவார்.

## கோவிலில் திருட்டு

(உடுவில்)

பலாலி இராசராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் திருட்டு நடைபெற்றுள்ளது

மேற்படி கோவில் பரிவார மூர்த்திகள், பிள்ளையார் சுப்பிரமணியர் ஆகிய விக்கிரகங்களைப் புரட்டி இயந்திரத் தகடுகளையும் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான சுவர் மணிக்கூடு ஒன்றையும் எடுத்துச் சென்றுள்ளனர். (109)

## இப்படியும் நடக்கிறது

சுதந்திரக் காற்று இப்பொழுது மெல்ல மெல்ல வீசத் தொடங்கியதும்...அந்த நாள் ஞாபகமும் மெதுவாக நகரத் தொடங்குகிறது.

1987 அக்டோபர் மாதம். நீண்டநாள் யுத்தத்தின் பின்னர் இந்தியப் படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியிருந்தனர்.

இந்தியப் பத்திரிகையாளர்களை விமானத்தில் அள்ளிக்கொண்டு வந்து தங்களது 'வீர'த்தைக்காட்டினர்.

''யாழ்ப்பாணத்தில் நிலைமை இப்பொழுது நன்றாகவே இருக்கிறது. அங்குள்ள தமிழ் மக்கள் இந்திய இராணுவத்துக்கு நல்ல ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். மக்கள் நடமாட்டமும் சகல இடங்களிலும் தாராளமாக-சுமுகமாக உள்ளது. நேரில் தான் பார்க்கப் போகிறீர்களே...''

இவ்விதமாக இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு விமானத்தில் வைத்து இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் கூறினார்கள்.

விமானம் தாழப் பறந்து சென்றது.

இந்த விமானத்தில் பிரயாணம் செய்த ஒரு இந்தியப் பத்திரிகையாளர், இந்தியத் தூதரக அதிகாரிகளை மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டபோது இப்படிச் சொன்னாராம்:

''வானத்தைப் பார்த்தேன்...பூமியைப் பார்த்தேன்... மனிதரை மட்டும் பார்க்கவில்லை...''

தூதரக அதிகாரிகள் 'மூச்சு' விட கொஞ்சநேரம் பிடித்ததாம்!

அடிக்குறிப்பு: அந்த இந்தியப் பத்திரிகையாளரின் பெயர்: திரு. சுபா சுந்தரம். சபாஷ் சுந்தரம்! (ஒரு சின்னக் கிசுகிசு: இத்தகவலை சுந்தரமே என்னிடம் சொல்லியிருந்தார் )

'ஊடுருவி'

## யாழ். மாவட்ட மொத்த வாக்காளர்: 5,92,199

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 5 லட்சத்து 92,199ஆகும். இதில் கிளிநொச்சி நிருவாக மாவட்டத்திலுள்ள வாக்காளர்களும் அடங்குகிறார்கள்.

1988ஆம் ஆண்டு ஜூன் மாதம் கணக்கெடுப்பு நடாத்தி உறுதிப்படுத்தப்பட்ட வாக்காளர்கள் தொகையே மேற்படி எண்ணிக்கையாகும்.

1988 டிசெம்பர் ஜனாதிபதி தேர்தல் 1989 பெப்ரவரி 15 பொதுத்தேர்தல் ஆகியவை 1987 ஜூன் மாதம் உறுதிப்படுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

### தேர்தல் மாவட்டம் - 10

### யாழ்ப்பாணம்

| வாக்கெடுப்புபிரிவு | 1988 மொத்த வாக்காளர் |
|---|---|
| ஊர்காவற்றுறை | 49482 |
| வட்டுக்கோட்டை | 58926 |
| காங்கேசன்துறை | 60386 |
| மானிப்பாய் | 58320 |
| கோப்பாய் | 56450 |
| உடுப்பிட்டி | 52112 |
| பருத்தித்துறை | 40200 |
| சாவச்சேரி | 51594 |
| நல்லூர் | 61935 |
| யாழ்ப்பாணம் | 49219 |
| கிளிநொச்சி | 53575 |
| | 5,92,199 |

(153)

# கவனிப்பார்களா?

தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் அது சரியான முறையில் அமுல் நடத்தப்படுகிறதாவென்பதுதான் தெரிந்து கொள்ளப்பட வேண்டிய விஷயம்.

யாழ்ப்பாணம், தமிழ்பேசும் மக்கள் 99 வீதம் வாழும் பகுதி. அங்கு நிச்சயம் தமிழ் மொழிக்குரிய இடம் தரப்படத்தான் வேண்டும்.

ஆனால், யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதியில் வழங்கப்படும் துண்டில் 'மருந்து'க்குகூட தமிழ் இல்லை. அத் துண்டில் சிங்களமும், ஆங்கிலமும்தான் ஆட்சிபுரிகிறது. அதில் உள்ளவற்றைப் புரிந்து கொள்ள முடியாமல் தமிழ் பேசும் நோயாளர்கள் தவிக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனித்து தமிழ் மொழிக்கும் உரிய இடமளிப்பார்களா?

- பாதசாரி

# அன்னை பூபதி எழுச்சி விழா இன்று ஜெயந்தி நகரில்

(கிளிநொச்சி)

அன்னை பூபதியின் எழுச்சி விழா இனறு புதன்கிழமை மாலை கிளிநொச்கி ஜெயந்தி நகர் கிராம அபிவிருத்திச் சங்க முன்றலில் நடைபெறவுள்ளது.

ஜெயந்திநகர் சிற்றூர் அவைத்தலைவர் திரு. நோபேட் மரியதாஸ் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில்கிளிநொச்சிமாவட்ட வன்னிப் பிரதேச விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும், அரச உயரதிகாரிகளும், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் உரையாற்றவுள்ளனர்.

இறுதியில் பட்டிமன்றம், கவியரங்கம் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

# "விளையாட்டுத் திடல் வாழக்கூடிய பயிற்சியை மாணவருக்கு கற்பிக்கிறது"

(புலோலி)

"மெய்வல்லுனர் போட்டிகளில் போட்டிவிதிகளை மாணவர்கள் தெரிந்து அவற்றை மதித்து நடப்பதன் மூலம் ஒரு நாட்டின் சட்ட திட்டங்களை அறிந்து அதற்கேற்ப வாழக்கூடிய பயிற்சியையும் பக்குவத்தையும் விளையாட்டுத்திடல் கற்பிக்கின்றது."

இவ்வாறு வடமராட்சி கோட்டக்கல்விப் பிரிவு கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் சிறப்பு விருந்தினராககலந்துகொண்டு பேசிய யாழ். கல்வித்திணைக்கள உடற்பயிற்சிக் கல்வி அதிகாரி திரு. கே. நாகமணி கூறினார்.

வடமராட்சிகோட்டக்கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. எஸ். செல்லத்துரை தலைமையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியின் போது திரு நாகமணி மேலும் பேசுகையில் கூறியதாவது

"விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் முன்னணி வகிக்க விளையாட்டு நுட்பங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். இன்று உடற்கல்வியில் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மிகச்சிலரே இருக்கிறார்கள். இக்குறையைப்போக்க கல்விக் கோட்ட மட்டத்தில் அண்மையில் தெரிவான இளம் ஆசிரியர்களுக்கு பகுதி பகுதியாக விளையாட்டு நுட்பங்களை சேவைக்காலப் பயிற்சி மூலம் வழங்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக வடமாரட்சி கிழக்குப் பகுதியிலுள்ள நாகர்கோவில், உடுத்துறை கொத்தணிப்பாடசாலைகளிலிருந்து 50இளம் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் முதலாம் தவணை விடுமுறை காலத்தின் போது சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமராட்சிகோட்டக்கல்வி பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு பொன் வீரபத்திரன் யாழ். கல்வித்திணைக்கள உடற்பயிற்சி கல்வி அதிகாரி திரு. ரி. அருணகிரிராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(61-த)

## ஐக்கிய விளையாட்டு கழகம் வெற்றி

(பண்டத்தரிப்பு)

விளையட்டு அமைச்சின் ஆதரவில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப்போட்டியில் பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. எல்லே போட்டியில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது. வேறுசில போட்டிகளின் முடிவுகள் குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதால் முடிவுகள் வெளிவரவில்லை.

(72)

## குறிஞ்சி இல்லம் முதலிடம்

(அச்சுவேலி)

புத்தூர் கொத்தணிப் பாடசாலைகளிடையே நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் குறிஞ்சி இல்லம் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

குறிஞ்சி, முல்லை, நெய்தல் மருதம் என்ற நான்கு இல்ல அடிப்படையில் நடைபெற்ற கொத்தணிப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகளில் குறிஞ்சி இல்லம் 258 புள்ளிகளைப்பெற்று முதலாமிடத்தையும், நெய்தல் இல்லம் 234 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடத்தையும் முல்லை இல்லம் 207 புள்ளிகளைப்பெற்றுமூன்றாமிடத்தையும் மருதம் இல்லம் 198 புள்ளிகளைப்பெற்று நான்காமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

மெய்வல்லுநர் போட்டிகள் புத்தூர் கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. வி. சந்திரசேகரம் தலைமையில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறறன.

பிரதம விருந்தினராக மருதனமடம் கோட்டக் கல்வி அதிகாரி திரு, கே. குலசேகரமும் சிறப்பு விருந்தினரா கோட்டக்கல்வி அதிகாரி திரு என் கணேசபிள்ளையும் கலந்து கொண்டனர்.

(74)

## கும்பாபிஷேகம்

[மாங்குளம்]

மாங்குளம் கல்லிருப்பு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேகம் இம் மாதம் 8-ம் திகதி நடைபெறவுள்ளது. மஹாகும்பாபிஷேக கிரியைகளை சிவஸ்ரீ வே. தியாகராஜக் குருக்கள் பிரதம குருவாக செயல்படவுள்ளார்.

[150]

## தவக்கால நற்சிந்தனை

### தூதுவராக மாறுவோம்

பணத்தால், பதவியால். படாடோபத்தால் முடியாததை நல்ல பணியால் பாசத்தால் பகிர்கின்ற உணர்வால் மாற்றலாம் என்பதனைத்தான் அன்று கிறீஸ்து தன் வாழ்வில் நிருபித்துக்காட்டினார்.

அன்று அவர் தனது சீடர்களாகத் தெந்துகொண்டோரில் சாதாரண கடல் தொழில் செய்துகொண்டிருந்தோரையே அழைத்துக் கூறினார். "வாருங்கள் என்னோடு நல்ல மனிதரைப் பிடிப்பவராக்குகிறேன்" என்றார். அவரது வாழ்வில் தனது சேவைக்கு அழைத்து பணிகளைப்பொறுப்புகளைக் கொடுத்ததோடு மட்டும் நின்றுவிடாது அவர்களோடே தன் பணிகளைத் தொடர்ந்தார் என்றால் அவர்களது வழித்தோன்றல்களான பொதுமக்கள் எத்தனை முக்கியமானவர்கள்.

அந்த நற்செய்திகளை நாம் மட்டும் அறிந்து ருசித்து அனுபவிப்பவர்களாக வாழாது அதனை ஏனையவர்களும் அறிய அவர்களும் அனுபவிக்க எமது பணிகள் மூலம் ஏற்பாடுசெய்வதே அந்த இறைமகனில் நாம் கொண்ட விசுவாசத்தின் அர்த்தமாகும்.

நற்செய்தியின் தூதுவராக அழைத்துக்கொண்டோரில் நாமும் ஒருவராக மாறவேண்டுமெனின் அதன்படி வாழ்வையும் மாற்றிக்கொள்ள வேண்டும்வாழ்க்கையையும்இணைத்த தான பணியாலேயே நாமும் கிறிஸ்துவின் சாயலாக மாற வேண்டும்.

—அருட் சகோ.
பி. மார்க்இக்னேசியஸ்
C. M S. F.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆசிரியர் நியமனங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் காலியாகவுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேலும் 104 பயிலுநர் ஆசிரியர்களும், 300 பயிற்சி ஆசிரியர்களும் வட - கிழக்கு மாகாண சபையின் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் 23 விஞ்ஞான, கலைப்பட்டதாரிகளும் மத்திய அரசின் கல்விச்சேவைக்குழுவினால் 26 உடற்கல்வி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(பூ)

# புலிகள் நடவடிக்கையால் சட்டப்படி வேலை கைவிடப்பட்டது

(நாவற்குழி)

ஏப்ரல் முதலாம் திகதி நடைமுறைப்படுத்தப்படவிருந்த யாழ். உதவி வைத்திய அதிகாரிகளின் 'சட்டப்படிவேலை' என்ற தீர்மானம் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட நடவடிக்கையினால் கைவிடப்பட்டது.

எல்லா மாவட்டங்களிலும் மேலதிக நேர வேலைச் சம்பளம் வழங்கியும் யாழ் மாவட்டத்தில் மட்டும் கடந்த இரண்டு வருடங்களாக மேலடும். வார்த்தையையும், திக நேரச்சம்பளம் வழங்கப்படாததைத்தொடர்ந்து ஏப்ரல் முதலாந் திகதி முதல் காலை 8-00 மணி முதல் 12-00 மணிவரையும் பிற்பகல் 2-00 மணிமுதல் 4-00 மணி வரையும் என்று சட்டப்படி வேலை செய்ய யாழ் உதவி வைத்திய அதிகாரிகள் (ஆர். எம். ஓ) சங்கம் தீர்மானித்திருந்தது.

இதுவிஷயத்தில் கவனம் செலுத்திய புலிகள் இயக்கம் 30ந் திகதி இரவு செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் யாழ். மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ந. கனகசபையையும்கணக்காளர் திரு. எக்ஸ். ஞானசேகரத்தையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியதன் மூலம் ஒருமாத காலத்திற்குள் பழையகொடுப்பனவுகள் யாவும் கொடுக்க இணக்கம்தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சட்டப்படிவேலை என்ற தீர்மானம் உடனடியாகக் கைவிடப்பட்டது.

இது தொடர்பாக யாழ் உதவி வைத்திய அதிகாரிகள் சங்கம் புலிகள் இயக்கப் பிரமுகர்களுக்கு தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துள்ளது.

(107)

# தமிழ் தின போட்டியில் நாவற்குழி ம. வி. சாதனை

(நாவற்குழி)

யாழ். கோட்டக் கல்வி மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டியிலும் நாவற்குழி மகாவித்தியாலயம் சாதனை நிலைநாட்டியுள்ளது.

பன்னிரண்டு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி மூன்று நிகழ்ச்சிகளில் முதலாம் இடத்தையும், மூன்று நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடத்தையும், மூன்று நிகழ்ச்சிகளில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் எட்டு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி ஒரு நிகழ்ச்சியில் முதலாம் இடத்தையும், ஒரு நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தையும் ஒரு நிகழ்ச்சியில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் நான்கு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி இரண்டு நிகழ்ச்சிகளில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. மொத்தத்தில் கைதடிக் கொத்தணிப் பாடசாலைகள் பதினான்கு நிகழ்ச்சிகளில் சான்றிதழ்களைத் தட்டிக் கொண்டன.

(107)

# காணி உறுதிகளை பதிவுசெய்ய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்படாத 1988 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையிலான காணி உறுதிகளை இம் மாதம் 16-ம் திகதிக்குப் பின்னர் பதிவு செய்யலாம் என்று காணிப் பதிவகம் அறிவித்துள்ளது.

1988 ஜனவரி தொடக்கம் 1988 ஏப்ரல் வரையான 7000 காணி உறுதிகள் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளன.

தென்மராட்சி, தீவுப்பகுதி, யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்கு ஆகிய பகுதிகள் இக் காணி பதிவகத்தினுள் அடங்குகிறது. இப் பரிபாலன எல்லைக்குள் 200 நொத்தாரிசுமார்கள் கடமை புரிகிறார்கள்.

(153)

# மாவிட்டபுரத்தில் புதுவருட விழா

(மாவிட்டபுரம்)

புதுவருடத்தை முன்னிட்டு மாவிட்டபுரம் கிராமசேவை அலுவலர்கள் பிரிவுகளுக்கான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 9 ம் திகதி திங்கட்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் மாவிட்டபுரம்-கீரிமலை வீதியில் அமைந்திருக்கும் சீமெந்துத் தொழிற்சாலைக்கான நிலத்தில் அமைக்கப்பட்ட மைதானத்தில் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் திரு. வி. இராசையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டியில் துவிச்சக்கரவண்டி 10 மைல் ஆண்கள், ஐந்து மைல் பெண்கள், மரதன் ஓட்டப் போட்டி ஐந்து மைல் ஆண்கள், தாச்சிப் போட்டி, கயிறு இழுத்தல், பத்து வயதுச் சிறுவர்களுக்கான சங்கீதக் கதிரை, ஆறு வயதுச் சிறுவர்களுக்கான மூன்று சில்லுச் சைக்கிள் ஓட்டம், குண்டு எறிதல் விநோதஉடைப்போட்டி, தடை ஓட்டம் பெண்கள், முதியோர் ஓட்டம் அறுபது வயதுக்கு மேற்பட்டோர் ஆகியனவும் நடைபெறவுள்ளன.

## புதிய நிர்வாக சபை

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை சனசமூக சேவா நிலையப் பொதுக்கூட்டம் அண்மையில் திரு. கே. ஸ்ரீராஜராஜேஸ்வரன் தலைமையில்நடைபெற்றது, பின்வருவோர்புதியநிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் எம் பிரேம்குமார், உப-தலைவர் எஸ். பரமநந், செயலாளர்: எஸ். ஆனந்தவேல், உப செயலாளர்: எம். சந்திரகாந்தலிங்கம், பொருளாளர்: எஸ் ஸ்ரீஸ்கந்தராஜா மேலும் அறுவர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

(52-த)

## "சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

# மாவட்ட வைத்திய அதிகாரி நியமிக்கப்பட வேண்டும்"

### நலன்புரிச் சங்கம் கோரிக்கை

(மட்டுவில்)

''சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவர் இல்லாமையினல் நோயாளர்கள் பெரிதும்பாதிப்படைகிருர்கள். உடனடியாக இங்கு ஒரு நிரந்தர மாவட்ட வைத்திய அதிகாரியை நியமிக்கவேண்டும்''.

இவ்வாறு தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்கக் கூட்டத்திற்கு சாவகச்சேரி நகரசபையின் விசேட ஆணையாளரும், சங்கத் தலைவருமான திரு. த. நவரத்தினராஜா தலைமை தாங்கினுர். இதில் மேலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கோடை காலங்களில் கிணறுகளில் தண்ணீர் வற்றிவிடுகின்றன. எனவே நோயாளரின் தண்ணீர்த் தேவைக்காகக் குழாய்க் கிணறு ஒன்றும், நீர்க் குழாய் ஒன்றும் புதிதாக அமைக்கப்படவேண்டும். இதற்கான முழுச் செலவையும் நோயாளர் நலன்புரிச் சங்கம் பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளது.

மேலும் இந்த ஆஸ்பத்திரியில் 17 மருத்துவத் தாதிமார் பணியாற்றி வந்தனர். ஆனல் இப்பொழுது 14 மருத்துவத் தாதிமார் மட்டுமே கடமையில் உள்ளனர். மூவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த மூவரின் இடங்கள் உடன் நிரப்பப்படவேண்டும்.

இந்த ஆஸ்பத்திரி வளாவு சுத்திகரிக்கப்படவேண்டும். இந்த ஆஸ்பத்திரியில் சிற்றூழியர் உட்பட ஊழியர் பற்ருக்குறை காரணமாக ஆஸ்பத்திரி வளவு சுத்திகரிக்கப்படுவதில்லை. இக்குறைபாடு உடனடியாக நீக்கப்படவேண்டும்.

சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகம் மீண்டும் முதலாம் வார்ட்டில் முன்பிருந்த இடத்திலேயே அமைக்கப்படவேண்டும். இது இப்பொழுது நுணுவிற் பகுதியில் இயங்கிவருவதால் பலருக்கும் பல வசதியீனங்கள் ஏற்படுகின்றன.

விசேட நிபுணர் வைத்திய சேவையை மீண்டும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நடைமுறைக்குக் கொண்டுவந்து மக்களின் நேரம், பணம், வீண் விரயங்களைத் தவிர்க்கவேண்டும்.

# கிளிநொச்சிமாவட்ட இந்து இளைஞர் மன்றம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்ட இந்து இளைஞர் மன்றம், கரைச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் திரு. க. துரைராசாவினுல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. 'ஆத்மஜோதி' திரு, நா. முத்தையா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினுர். கிளிநொச்சிக் கச்சேரிக் கணக்காளர் திரு. கா. வீரசிங்கம் இந்து இளைஞர் மன்றத் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராக திரு. ரி. சிவதட்சணமூர்த்தியும், பொருளாளராகத் திரு. ரி. தங்கராசாவும், உப தலைவராகத் திரு. செ. குகதாசன், திரு கு. பரராசசிங்கமும் தெரிவாகினர். 9 நிருவாகசபை உறுப்பினர்களும் தெரிவாகினர்,

புதிய தலைவர் தமது உரையில்; தமக்கு வழங்கப்பட்ட கடமைகளைச் சகலரது ஒத்துழைப்புடனும் செய்வதாகவும், இந்து இளைஞர் மன்றத்திற்கென ஒரு காணியை அரசாங்க அதிபரிடம் பெற்றுக் கட்டிடம் அமைக்க முயல்வதாகவும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இந்து இளைஞர் மன்றக் கிளைகளைத் திறக்க உத்தேசித்துள்ளதாகவும் கூறினுர்.

# பயிலுநர் ஆசிரியர்

## சேவைக்கால முன்பயிற்சி

(ஆனைக்கோட்டை)

மருதனுமடம் கோட்டக்கல்விப்பிரிவில் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குச் சேவைக்கால முன் பயிற்சி இம்மாதம் முதல் நடாத்தப்படவுள்ளது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவானவர்களுக்கு சுன்னுகம் இராமநாதன் கல்லூரியிலும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவானவர்கட்கு பண்டத்தரிப்பு இந்து மகளிர் கல்லூரியிலும், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவானவர்களுக்கு மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலையிலும், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளவர்களுக்கு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் பயிற்சி நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் வீதம் ஒன்பது நாட்கள் நடைபெறும் இப்பயிற்சி தினமும் காலை 8 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவிருக்கின்றது. (139)

## யாழ்நகரில் பௌத்தபிக்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த 7 வருடங்களுக்குப் பின்பு பௌத்த பிக்கு ஒருவர் நேற்றுப் பகல் யாழ்நகரில் காணப்பட்டார்.

குளியாப்பிட்டியைச் சேர்ந்த வண. ஹன்சலகமுவ பியதிஸ்ஸ ஹாமி (வயது 70) என்பவரே அந்தப் பிக்கு ஆவார்.

நயினதீவு நாக விகாரைக்கு திருத்தல யாத்திரையாகவந்ததாக அவர் கூறினுர்.

அவர் தனது யாழ். விஜயம் பற்றி ஈழநாடு நிருபருக்குத் தெரிவிக்கையில்; ''கடந்த மாதம் 30ம் திகதி நான் குருநாகலிலிருந்து ரயில் மூலம் யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி நயினதீவு சென்றேன்.

''யாழ். ரயில் நிலையத்தில் இருந்து நடந்து யாழ். பஸ் நிலையம் சென்று அதன்பின் குறிகாட்டுவான் வழியாக நயினதீவை அடைந்தேன்.

போகும் வழியிலும், வரும் வழியிலும் எனக்கு எந்தவிதமான தொல்லையும் பிரச்சினையும் இருக்கவில்லை. எனது வசிப்பிடம் பண்டுவஸ்நுவர தேர்தல் தொகுதியிலுள்ள நிக்கெறதா ஆரணியம் ஆகும், இது நடுக்காட்டில் அமைந்துள்ளது. எனக்கு ஓரளவுக்குத் தமிழ் பேசத் தெரிய'' என்றும் கூறினுர். (153)

### கானகத்தில்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தாயம் ஒன்றை உருவாக்க நாம்பாடுபடவேண்டும். இந்தக்கவின்கலைக் கல்லூரி பொது மக்களின் சொத்து இதை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும்'' என்ருர். (83)


ஹரன் திரையில்

நாயகன்!!!

தினசரி: காலை 10-30, 2-30, மாலை 6-30

★ கமலஹாசன்
★ சரண்யா
★ ஜனகராஜ்

நாயகன்

(கலர்)



தமிழீழ விடிவிற்காய் தன் இன்னுயிரை ஈந்த

அன்னை பூபதிக்கு

★★★ எமது கண்ணீர் அஞ்சலி ★★★

மறந்திடுவோமா அம்மா உன் மாபெரும் தியாகத்தை!



கம்பிச் சிறைக்குள்ளே வெம்பியும் வெதும்பியும்
பிள்ளைகள் துடித்திருக்க தாய்பூமி பறிபோக
கண்டதும் சுடுகின்ற காவல் தர்மத்தை
கொண்டவர்கள் மீண்டும் காவலுக்கு வருவதெனில்
வேலி ஓரத்தில் கறையான்கள் புற்றெடுக்க
கூலிகள் சேர்ந்து புகழ்பாடும் பதவிகளும்
விழுதுவிட்டு வளர்ந்த விருட்சமொன்றில்
பழுதுபட்டால் பார்த்திருத்தல் பாவமென்று
தங்கத்தமிழ் தாயின் விலங்குடைக்கப் புறப்பட்ட
எங்களின் பூபதி அம்மா!
அங்கம் சோர்ந்ததோ அகிம்சைப் போரிலே
ஒன்றல்ல ஓராயிரம் ஆண்டுகள் ஆனலும்
மறந்திடுவோமோ அம்மா! உன் மாபெரும் தியாகத்தை!

மாதகல் தனியார்துறை மினிபஸ் சேவைச் சங்கம்,

மாதகல்.

(ஸி 3709)

## அன்னை பூபதியின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்னை பூபதி நினைவுக் கூட்டத்தில் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகளின் கைதடி-நாவற்குழிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. அப்பன் குறிப்பிட்டார்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ் தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அப்பன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''இன்றும் எமது கொள்கையும், குறிக்கோளும் ஒன்றுகவேயிருக்கிறது. ஆனுல் எமது போராட்டத்தின் வடிவங்கள் தான் மாறுபடுகின்றன. அன்று இந்தியஇராணுவத்தை எதிர்த்துப் போரிடத் தலைவர் துணிந்திராவிடில் இன்று இலங்கை வாழ் மக்கள் அனைவருமே இந்திய இராணுவத்திடம் அவமானப்பட்டிருக்க வேண்டியேற்பட்டிருக்கும்.

''நாம் இன்று ஒரு வல்லரசை எதிர்க்கக்கூடிய பலம் பெற்றுள்ளோம். அதனுல் தான் இலங்கையரசு பேச்சு வார்த்தைக்கு அழைத்திருக்கின்றது''.

இந்நினைவுக் கூட்டத்தை ஆரம்பித்துவைத்து இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். தில்லைநாதன் பேசுகையில்; ''கடந்த காலங்களில் எமது அரசியல்வாதிகள் பாராளுமன்ற முறையில் நம்பிக்கை வைத்துக் கடைசியில் கண்டது ஒன்றுமில்லை. இந்தக் கட்டத்தில்தான் ஆயுதப் போராட்டம் தலைதூக்கியது. ஆயுதப் போராட்டம் உச்சக்கட்டம் அடைந்தபோதுதான் நாம் அகிம்சைப் போராட்டத்திலும் சளைத்தவர்களல்ல என்பதைத் தியாகத்தாய் அன்னை பூபதி நிருபித்துக்காட்டினுர்'' என்ருர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் அன்னை பூபதியின் ஆத்மசாந்திக்காக இரண்டுநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (107)

## இன்று புதிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போடப்படும்.

இன்று ஆரம்பமாகும் பாராளுமன்ற அமர்வுக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கலந்துகொள்ளுமா இல்லையா என்பதுபற்றிப் பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை செய்தி வெளியிடப்படவில்லை.

## செப்புக்கம்பி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அது நிறுத்தப்படாமல் வேகமாகச் செலுத்தப்பட்டது.

இதனைப் பின்தொடர்ந்த சுங்க அதிகாரிகள், படகைக் கைப்பற்றியதுடன், அதில் இருந்த மூவரையும் கைது செய்து, 52 பொதிகளில் வைக்கப்பட்டிருந்த செப்புக் கம்பிகளையும் கைப்பற்றினுர்கள்

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர், இலங்கைப் பிரஜை என்றும், இருவர் இந்தியப் பிரஜைகள் என்றும் அறிவிக்கப்பட்டது. (து)

## ராஜீவ்காந்தியை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட மேற்படி கடற்படை வீரர் எச்சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பாதுகாப்புப்படையில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாரென்றும், குறித்த காலத்திற்கு இவர் கண்காணிக்கப் படுவாரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## பட்டம்பெற்றவர்கள்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா குறிப்பிட்டார்.

கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டிக்கு கல்லூரி அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் தலைமைதாங்கினுர். தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் துரைராஜா குறிப்பிட்டதாவது:-

எமது கல்விக் கொள்கைகளிலே உள்ள குறைபாடுகள் எமக்கு பல்வேறு வகையான சிக்கல்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. பல போட்டிகளையும் உண்டுபண்ணுகின்றன. சுமார் 5 லட்சம் மாணவர்கள் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இதில் 1, 20, 000 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைகினறனர். 30,000 பேர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெறுகின்றனர் ஆனுல் 6,000 மாணவர்கள் மட்டுமே பல்கலைக் கழகங்களில் அனுமதிபெறுகின்றனர் எனவே 1 2 வீதமான மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைப்பதில்லை. இதனுலேயே நமது நாட்டில் பல்வேறு வகையான பிரச்சனைகள் தலைதூக்குகின்றன இது எமது கல்வி முறையில் உள்ள குறைபாட்டையே வெளிப்படுத்துகின்றது.

ஒவ்வொருவரும் நாட்டுப் பற்றுடன் செயற்பட வேண்டியது மிகமுக்கியமாகும், இல்லையேல் மனிதவாழ்வின் இலட்சியவெற்றியைப் பெறமுடியாது.

விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய வீராங்கனைகளுக்கான பரிசில்களைத் திருமதி துரைராஜா வழங்கினுர். (52)

# கொழும்பு - யாழ். விசேட ரயில் சேவை

(யாழ்ப்பாணம்)

தமிழ்-சிங்களப் புத்தாண்டுப் பண்டிகைத் தினத்தை முன்னிட்டு, வடபகுதிக்கு விசேட ரயில் சேவைகள் நடைபெறவுள்ளன.

இதற்கான அறிவுறுத்தல்கள். யாழ் ரயில்நிலயத்திற்கு அநுராதபுரம் ரயில்வேக் கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விசேட ரயில் சேவை, கொழும்புகோட்டையிலிருந்து 6ம் திகதியும், 12ம் திகதியும் நடைபெறும்.

இத்தினங்களில் கொழும்பு கோட்டையிலிருந்து விசேட ரயில் இரவு 10 மணிக்கு காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும். அடுத்த நாள் காலை 6-38 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடையும் ரயில், காலை 7 25 மணிக்கு காங்கேசன் துறையைச் சென்றடையும்.

பின்னர் 9ம் திகதியும், 15ம் திகதியும் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி விசேட ரயில் சேவைகள் நடத்தப்படும்.

இத்தினங்களில் மாலை 5-45 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் ரயில், மாலை 6-15 மணிக்கு யாழ். ரயில்நிலையத்தை வந்தடைந்து மறுநாள் அதிகாலை 2-55 க்கு கொழும்புசென்றடையும்.

## வீடமைப்புக் கடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதுசம்பந்தமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட மகாமையாளர் விடுத்த சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விண்ணப்பப் படிவங்கள் இன்றுமுதல் இம்மாதம் 25-ம் திகதி வரை வழங்கப்படும்.

படிவங்கள் யாழ்ப்பாண மாநகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை ஆகிய இடங்களில் வழங்கப்படும். ஒரு படிவத்தின் கட்டணம் இரண்டு ரூபா ஆகும்.

15 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடன் பெறுநர் பட்டியலில் பதிவ செய்தவர்கள் மட்டுமே இக்கடனைப் பெறமுடியும். இது தொடர்பாக வேறு எந்த நிறுவனத்திலிருந்தோ, அல்லது தனிப்பட்ட நபர்களிடமிருந்தோ சிபார்சுகள் பெறவேண்டிய அவசியமில்லை அரசியல், சாதி, இனம், சமயம், சொந்தம், அமைவு அல்லது வேறு எந்த தனி மனித தொடர்புகளுக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. பதிவு செய்யப்பட்ட அடிப்படையில் கடன் பெறுநர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

பதிவு செய்து கொள்வதற்கான தகுதிகள்; உண்மையான வீட்டுத்தேவையொன்று உடையவராகவும், குறிப்பிட்ட நகரசபையில் அல்லது மாநகர சபையில் நிரந்தரமாக வசிப்பவராகவும் 18 வயதிற்கும் 50வயதிற்கும் இடைப்பட்டவராகவும், மாதாந்த குடும்ப வருமானம் 2400 ரூபாவிற்கு உட்பட்டவராகவும், ஏற்கனவே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்தோ, வீடமைப்புத் திணைக்களத்திலிருந்தோ, அல்லது புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்திடமிருந்தோ வீடமைப்பு நன்மை பெறுதவராகவும், இருப்பதே இக்கடனைப் பெறுவதற்குரிய தகுதிகளாகும்.

இம்மாதம் 25-ம் திகதிக்குப் பின்பு படிவங்கள் விநியோகிக்கப்படவோ, ஏற்றுக் கொள்ளப்படவோ மாட்டாது.

## அமைச்சர்களின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளும் வகையில் உத்தியோகபூர்வ பயணங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதாசா எடுத்துள்ளார்.

இதற்கிணங்க மேற்படி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள வசதியளிக்கும் வகையில் அமைந்த வழிகாட்டி விதிகள் அடங்கிய கோவையொன்று உருவாக்கப்படவுள்ளது.

## இன்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்ட மீளக் குடியமர்வு நிவாரணக் கொடுப்பனவு ரூபா 1,000 காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையில் இன்று புதன்கிழமை வழங்கப்பட இருக்கிறது.

நாளை வியாழக்கிழமை, வசாவிளான் வடக்குப் பகுதிக்கும், 6ம் திகதி மயிலிட்டி வடக்கு, 7ம் திகதி தையிட்டி, 8ம் திகதி பலாலி கிழக்குப் பகுதிக்கும் இதே வங்கியில் நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். (153)

## பெருந்தோட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் மும்மொழிகளிலும் காணப்பட்ட பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் பணிப்பின் பேரிலேயே தமிழ் எழுத்துக்கள் நீக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

தமிழ் எழுத்துக்கள் நீக்கப்பட்டது குறித்துத் தொழிற் சங்கங்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதுடன், பெயர்ப் பலகைகளில் மீண்டும் தமிழ் வாசகங்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைப் பணிப்பாளரை மகஜர் ஒன்றின் மூலம் கேட்டுள்ளன. (பூ)

# மரண அறிவித்தல்



### சிவசம்பு இராஜமணி (சிவஞானம்)

புங்குடுதீவு 9-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் அத்தியடியை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஆகிய சிவசம்பு இராஜமணி காலமானுர். இவர் கணபதிப்பிள்ளை சிவசம்புவின் (முன்னுள் இரத்தினபுரி விஜயராஜா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) அன்பு மனைவியும், காலம் சென்ற விருத்தாசலம் (தம்பர்) நாகமுத்துவின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை முத்துப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களாகிய கந்தையா, ஐயம்பிள்ளை, சுப்பிரமணியம், வீரகத்திப்பிள்ளை, வேலாயுதபிள்ளை, காலஞ்சென்ற கதிர்காமு, கமலம் சின்னம்மா, செல்லம்மா, பாலாமணி ஆகியோரின் அன்புத் தங்கையும், காலம் சென்ற இராசையா, வேதவல்லி, தங்கம்மா, காலஞ்சென்ற தையல்நாயகி, பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துணியும் விஜயரட்ணம் (விஜயராஜ் ரேடேர்ஸ், யாழ்ப்பாணம்), லோகரட்ணம் (கனடா), கோபாலரட்ணம் (கனடா), பாலரட்ணம் (கனடா), டெலிக்காதேவி, உருத்திராதேவி, உமாதேவி, மாலினிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின அன்புத் தாயாரும், கதிர்காமநாதன் (அமெரிக்கா), கனகலிங்கம், வீரசுப்பிரமணியம் (ஐயனுர் & கொம்பனி, வீரா ரான்ஸ்போட் K. K. S.), முருகவேள் (பிரான்ஸ்), தாரணி, சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், உஷ்சாந்தினி, துஷ்சாந்தினி, ஆனந்தரூபன், தட்சாஜினி, தரீசிகா, நிர்மலேஸ்வரன், விஜயராஜ், தர்மநித்தியா, தனுரேகா, மகேந்திரராஜ் சமிந்தா, ஜெயராஜ், மதுரா ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார்.

அன்னுரின் ஈமைக்கிரியைகள் வியாழக்கிழமை (5-4-90) மாலை 4-00 மணிக்கு இல. 50, புதுவீதி, அத்தியடியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

(முன்னர் அறிவித்தபடி, தவிர்க்க முடியாத காரணத்தால் 4-4-90 புதன்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெறவில்லை.)

உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சிவசம்பு.

(சி-3712)

# மரண அறிவித்தல்

### திருமதி இராமசாமி கண்மணி அம்மா

திருமதி இராமசாமி கண்மணி அம்மா காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற தம்பையா இராமசாமியின் (Retired Teacher JHC) மனைவியும், இராசமணி அம்மா ஐயாத்துரையின் சகோதரியும், ஞானேஸ்வரி (Retired Teacher HLC), ஜெகேந்திரன் (Area Manager Samuel Sons & Co LTD), ஆகியோரின் தாயாரும், அ. சொக்கலிங்கம் (சட்டத்தரணி) ஜானகி ஆகியோரின் மாமியாரும், Dr. இந்துவதனி உதயக்குமார், Mrs (Dr.) இரதிவதனி கிருபாகரன், பார்த்திபன் ஜெகேந்திரன் (HNB, Trincomalee), சிவாணி, ஜனகன் ஜெகேந்திரன் (St. John's College), ஆகியோரின் பேத்தியும், ஆரணி, கண்மணியின் பூட்டியுமாவார். தகனக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை 5-ம் திகதி காலை 11 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
இ. ஜெகேந்திரன் (மகன்)

96, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். (சி-3714)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு சித்திரை மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under numbe B/100306/81.